பக்கங்கள்:-14

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 30 | புதன்கிழமை | 16.10.2024 | அதிர்வு 75

## வடக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை!

இப்படிக் கூறுகின்றது ஜே.வி.பி.

(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)




# சூறாவளிப் பரப்புரைக்கு பிரதான கட்சிகள் தயார்!

## வேட்பாளர்களுக்கு விருப்பு எண்கள் வழங்கும் பணி இன்றுடன் நிறைவு

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விருப்பு எண்கள் வழங்கும் பணிகள் இன்றுடன் நிறைவடையவுள்ளதால் பிரதான கட்சிகள், சிறிய கட்சிகள், சுயேச்சைக் குழுக்களில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் சூறாவளிப் பிரசாரத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

06

## கிழக்கு பல்கலை துணைவேந்தர் தெரிவில் பேராசிரியர் கனகசிங்கம் முன்னிலையில்!



மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கான தெரிவில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றிருக்கின்றார்.

தற்போதைய

06



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர், செயலாளர் மற்றும் மத்திய குழு ஆகிய தரப்புகள் தமது பொறுப்புக்களில் செயற்படுவதற்குத் தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பில் நேற்று என் பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

“தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டு, அந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அந்தத் தேர்தல் தொடர்பான விடயங்களில் நீதிமன்றம் இடையில் நேரடியாகத் தலையிடுவது குறைவு. அதனால் தமிழரசுக்கு எதிரான இப்போதைய வழக்கும் அதே பாணியில் தள்ளிப் போகும் என்று எதிர்பார்க்கலாம்” – என என் எதிர்பார்ப்பைக் கோடி காட்டி இருந்தேன்.

ஆனால் அதற்கு முன்னரே,

06







# முல்லை. மாவட்ட செயலகத்துக்கு கனேடியத் தூதுவர் நேற்று விஜயம்

(ந.லோகதயாளன்)

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்தார்.

மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனைச் சந்தித்து மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அவர் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் பிரச்சினைகள் குறித்தும், முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் தொடர்பாகவும் அரச அதிபரால் கனேடியத் தூதுவருக்கு விபரிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன், மாவட்ட தொழில் துறை அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.














# வடக்கு மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை!

## இப்படிக் கூறுகின்றது ஜே.வி.பி.



“அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும், அதிகாரப் பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல. அவர்களுக்கு அவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கே தீர்வு அவசியமாக உள்ளது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள இந்த விடயங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.”

– இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. மொழி ரீதியான பிரச்சினை அங்கு உள்ளது. அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் தாம் விரும்பும் மொழியில் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதுள்ளது. கொழும்பை மையப்படுத்தியுள்ள சில வசதி, வாய்ப்புகள் வடக்குக்குச் செல்வதில்லை.

யாழ்ப்பாணத்தில் ஓரளவு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள போதிலும் கிளிநொச்சி, வவுனியா அல்லது முல்லைத்தீவில் வாழும் மக்கள் மிகவும் கஷ்டமான வாழ்கையையே வாழ்கின்றனர். அங்குள்ளவர்கள் கல்வி முதல் அனைத்து விடயங்களையும் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

இந்த மக்கள் மிகவும் வறுமைக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். தெற்கில் இருந்து வடக்குக்குச் செல்லும் பாதை அழகாக உள்ளது. பாதையின் இருபுறங்களிலும் கடைகள் உள்ளன. ஆனால், பாதையைத் தாண்டி உள்ளே சென்றால் வீடுகள் இல்லை. மக்கள் வறுமையாகவும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதும் வாழ்கின்றனர். உள்பாதைகள் மிகவும் மோசமான முறையில் புனரமைக்கப்படாது புழுதிகளுடன் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் சிலர் வெளிநாடுகளில் இருப்பதால் ஓரளவு பொருளாதாரம் உள்ளது. ஆனால், வவுனியா அல்லது கிளிநொச்சி சென்றால் அங்கு பொருளாதாரம் இல்லை. முல்லைத்தீவில் வாழும் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழங்களையும், மரக்கறிகளையும் விற்பனை செய்துக்கொள்ள உரிய சந்தை வாய்ப்புகள் இல்லை. வேலைவாய்ப்புகள் மிகவும் குறைவாகும்.

தெற்கில் இருந்து அங்கு சென்று சுற்றுலாவில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால், அங்குள்ள மக்களின் வாழ்கை முள்ளின் மேல் உள்ளது.

பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி தேடுவதே அவசியமாக உள்ளது. காணி முரண்பாடுகள் நீண்டகாலமாக உள்ளன. போர்க் காலத்தில் தமது காணியைக் கைவிட்டு வெளியேறிய மக்கள் போர் நிறைவடைந்து சென்றபோது அந்தக் காணிகளை வேறு நபர்கள் கைப்பற்றி குடியேறியுள்ளனர். அரசு தலையீடு செய்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

பிரச்சினைகள் அவ்வாறுள்ளன. ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காத வடக்கின் தமிழ் அரசியல் தலைவர்கள், தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப்பகிர்வு போன்ற வசனங்களைப் பயன்படுத்திக்கொண்டனர்.

ஆனால், வடக்கின் அடித்தட்டு மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டம் அவசியமில்லை. அவர்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம் இல்லை. அவர்களுக்கு விசாயத்தை மேற்கொள்ள நீர் வசதிகளும், அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும், கல்வியும், நல்ல வைத்தியசாலைகளுமே அவசியமாக உள்ளன.

எமது நாட்டில் ஒருவர் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அவர் கொழும்புக்கு கட்டாயம் வரவேண்டிய தேவையுள்ளது. கண் பரிசோதனைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வரவேண்டியுள்ளது. அனைத்தும் கொழும்பை மையப்படுத்தியுள்ளன. இவ்வாறு கொழும்பை மைப்படுத்தியுள்ள அனைத்து விடயங்களும் நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் செல்லும்போது மக்களின் பிரச்சினைகள் தீரும்.

குறிப்பாக எமது நாட்டில் உற்பத்தி பொருளாதார முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். அந்தப் பொருளாதாரத்தின் பங்காளிகளாக அனைத்து பிரதேச மக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதுடன், அந்த பொருளாதாரத்தின் பிரதிபலன்களும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும்.

உற்பத்தி பொருளாதாரத்தின் பயன்கள் அனைத்து தரப்பினருக்கும் கிடைக்கும்போது நாட்டில் தற்போது காணப்படும் பிரச்சினைகளில் பெரும்பான்மையானவற்றுக்குத் தீர்வு கிடைத்துவிடும். அதன் ஊடாக அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்.” – என்றார்.

# மேல் மற்றும் தென் மாகாண பாடசாலைகள் இன்று திறப்பு




சீரற்ற காலநிலை காரணமாக மூடப்பட்டுள்ள மேல் மற்றும் தென் மாகாணங்களிலுள்ள பாடசாலைகள் இன்று திறக்கப்படும் என மேற்படி மாகாணங்களின் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக தங்குமிடங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் திறக்கப்படமாட்டாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக மேல் மற்றும் தென் மாகாணங்களிலுள்ள சில பாடசாலைகளுக்கு மேற்று முன்தினமும், நேற்றும் விடுமுறை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# ரணில் நாளை விசேட உரை!



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை வியாழக்கிழமை விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2024 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்க உரையொன்றை நிகழ்த்தவுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

நாட்டின் சமகால அரசியல் போக்கு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அவர் இதன்போது வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணிக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும், நாடாளுமன்ற அரசியலுக்கு அவர் விடைகொடுத்துள்ளார்.



# தேசிய மட்ட பெண்கள் உதைப்பந்தாட்டத்தில் மகாஜனாவின் இரு அணிகளும் சம்பியன்கள்

**(ந.லோகதயாளன்)**

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெண்கள் உதைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் 17, 20 வயது அணிகள் இரண்டும் சம்பியன்களாகியுள்ளன.

குயின்சி தலைமையிலான 20 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் பொலனறுவை பெண்டிவெல கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றி பெற்றது. முதல் பாதி ஆட்டத்தில் லயன்சிகா, அணித் தலைவி குயின்சி ஆகியோரது கோல்களுடன் 2:0 என மகாஜனா முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் லயன்சிகா, குயின்சி ஆகியோர் அதிரடியாக ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சம்பியனாகியது.

உமாசங்கவி தலைமையிலான 17 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றி பெற்றது.

முதல் பாதி ஆட்டத்தில் அணித்தலைவி உமாசங்கவி, கல்சிகா ஆகியோரது கோல்களுடன் 2:0 என மகாஜனா முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியாட்டத்திலும் உமாசங்கவி, கியூஸ்ரிகா ஆகியோர் அதிரடியாக ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சம்பியனாகியது.



# கைது செய்யப்பட்ட சீன பிரஜைகள் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை




கடந்த சில நாள்களுக்குள் சுமார் 460 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக் களம் தெரிவித்துள்ளது.

மேற்படி சந்தேகநபர்கள் சுற்றுலா விசா மூலம் நாட்டிற்கு வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந் துள்ளது.

அதற்கமைய அவர்கள் நாட்டில் தங்கியிருந்து தொழிலில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் குடிவரவு – குடியகல்வு ஒழுங் குபடுத்தல் சட்டத்தின் அடிப்படையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்க ளம் தெரிவித்துள்ளது.

கண்டி, அத்துல்கோட்டை, பல்லேகல, நத்தரன்பொத்த உள்ளிட்ட சில பகுதிகளில் இருந்து மேற்படி சந்தேகநபர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

# ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பில் உதய கம்மன்பிலவுக்கு அரசு காலக்கெடு




ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பான விசாரணை அறிக் கையை வெளியிடுவதற்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பிலவுக்கு மூன்று நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளி யிட்ட உதய கம்மன்பில, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாத ஐ.எம். இமாம் மற்றும் ஏ.என்.ஜே டி அல்விஸ் அறிக்கைகளை வெளியிடுமாறு கோரியிருந் தார்.

மேற்படி அறிக்கைகளை வெளியிடுவதற்கு அரசுக்கு 7 நாள்கள் கால அவகாசம் வழங்கியுள்ள உதய கம்மன்பில, அரசு அவற்றை வெளியிடத் தவறினால், தாம் அவற்றைப் பகிரங்கப்படுத்துவதாக அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், நேற்றைய அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர் பில் ஏதேனும் அறிக்கைகள் இருப்பின் அவற்றை மூன்று நாள்களுக்குள் வெளியிடுமாறு உதய கம்மன்பிலவிடம் கோரியுள்ளார்.

தற்போது அரசின் வசம் உள்ள விசாரணை அறிக்கைகள் முழுமையாக ஆராயப்பட்டு, விடுபட்ட பக்கங்கள் அல்லது வேறு விடயங்கள் உள்ளனவா என்பது தொடர்பில் கவ னத்தில் கொள்ளப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

உதய கம்மன்பிலவுக்கு அறிக்கை கிடைத்திருந்தால், அதை அவர் தாமதமின்றி சமர்ப்பிக்க வேண்டும் என்ப துடன், அந்த அறிக்கையை அவர் எவ்வாறு கைப்பற்றினார் என்பதையும் கண்டறிய வேண்டும்.

உதய கம்மன்பில இந்த அறிக்கையை இவ்வளவு காலம் மறைத்து வைத்திருந்தால் அதுவும் பாரிய குற்றமாகும் எனவும் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத் துரைத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இந்த விடயம் தொடர்பில் இன்று உரிய பதிலை வழங்குவதாகத் தெரிவித்தார்.

# அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைக்குழுவினர் சந்திப்பு

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது

இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என இதன்போது ஆணைக்குழுவின் அதிகாரிகளால் விளக்கம் அளிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் வேட்பாளர் ஒருவர் செலவிடும் பணத்தின் அளவு குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து 21 நாள்களுக்குள் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் உட்பட அனைத்து வேட்பாளர்களும் தமது செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த வழக்கை யாழ் நீதிமன்றம் வரும் நவம்பர் 18 ஆம் திகதிக்கு – அதாவது பொதுத் தேர்தல் முடிந்து நான்கு நாள்களின் பின்னர் – பரிசீலனைக்கு எடுக்கக் கூடியதாக அதனை ஒத்தி வைத்து விட்டது என நேற்று அறிய முடிந்தது.

என் எதிர்வுகூறலை யாழ் நீதிமன்றம் நேரத்துடனேயே செய்துவிட்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

இதில் இன்னொரு நகைச்சுவை விடயமும் உண்டு.

இந்த வழக்கில், இலங்கைத் தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளராக மருத்துவர் சத்தியலிங்கம் செயற்பட முடியாது, அந்தத் தகுதி அவருக்கு இல்லை என்று அறிவிக்கும்படி கோரியும் மட்டக்களப்பைச் சேர்ந்த மனுதாரர் நடராஜா வேண்டி இருக்கின்றார்.

செயலாளராகச் செயல்படும் தகுதி மருத்துவர் சத்தியலிங்கத்திற்கு இல்லை என்று உத்தரவிடக் கோரும் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கும் நடராஜா என்ற கட்சி உறுப்பினர் இந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கு பத்து நாள்களுக்கு முன்னர் சத்தியலிங்கத்திற்கு ஒரு விண்ணப்பம் செய்திருக்கின்றார்.

அந்த விண்ணப்பம், தமக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனம் வழங்கும்படி கோரி கட்சியின் செயலாளர் சத்தியலிங்கத்துக்கு, நடராஜா சமர்பித்த கோரிக்கை மனுவாகும்.

வேட்பாளர் நியமனம் கேட்டபோது சத்தியலிங்கம் அவருக்கு கட்சியின் செயலாளராகத் தெரிந்தார். வேட்பாளர் நியமனம் கிடைக்காது என்று தெரிந்ததும் அடுத்த நாள் அவர் செயலாளராக இருக்க தகுதியானவரல்லர், தகுதியற்றவர் என்று நீதிமன்றுக்குச் சென்றிருக்கின்றார் நடராஜா.

எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதி தேர்தலின் பின்னர் இந்த வழக்கு பரிசீலனைக்கு நீதிமன்றத்தில் எடுக்கப்படும். ஆனால் இந்த விடயம் எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும் என எதிர்பார்க்கலாம்.

இதேசமயம் இலங்கைத் தமிழரசு கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக திருகோணமலை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கும் நேற்று முன்தினம் திருகோணமலை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு பெப்ரவரி 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு இருக்கின்றது.

இந்த வழக்கை முடிப்பதற்கு இடையில் மூன்று விடயங்கள் செய்யப்பட வேண்டி உள்ளன.

ஒன்று – இந்த வழக்குத் தொடர்பான எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் வழக்கு விடயம் சம்பந்தமாக 'புதிய சுதந்திரன்' மின்னிதழ் வெளியீட்டாளர் அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிராக சுமத்தியுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விவகாரம் விசாரித்து முடிவு செய்ய செய்து கொள்ளப்பட வேண்டும். முடிவெடுக்கப்பட வேண்டும்.

அடுத்தது – இந்த வழக்கில் தம்மையும் இடையீட்டு எதிர்மனுதாரராகச் சேர்க்க வேண்டும் என்று கோரி, தம்மைத் தமிழரசு உறுப்பினர் என்று தெரிவித்து கிளிநொச்சியிலிருந்து ஒருவர் செய்த விண்ணப்பம் தொடர்பில் நீதிமன்றம் விசாரித்து முடிவு செய்ய வேண்டும். இந்த நபர் இப்போது தமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு சுயேச்சைக் குழுவைக் களத்தில் இறக்கி அதில் தானும் சேர்ந்து போட்டியிடுகின்றார். அதனால் தமிழரசு கட்சியின் உறுப்பினராக அவரைத் தொடர்ந்து கருத முடியுமா? அத்தகையவருக்கு இந்த வழக்கில் இடையீட்டு எதிர்மனுதாரர் நிலைமைக்கு இடமளிக்க வேண்டுமா என்பதை நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டி இருக்கும்.

மூன்றாவது – இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்ட, பின்னர் மேற்படி வழக்கின் வழக்காளியும் எதிராளிகளும் தங்களுக்குள் இணங்கிப் போக இனம் கண்டு அடையாளப்படுத்திய விடயங்களின் அடிப்படையில் வழக்கை முடிவுறுத்தலாமா என்று நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்.

எது,எப்படியோ வழக்கு நாலு மாதங்கள் தள்ளிப் போய் பெப்ரவரி 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

இந்த வழக்கு ஆரம்பித்து ஒரு வருடத்தை எட்டப் போகின்றது. இது அப்படி நீண்ட காலம் இழுபடும் என்பதை என் பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கிறேன். அதுதான் நடக்கின்றது.

விரைந்து வழக்கை முடிவுக்கு கொண்டு வந்து, மீண்டும் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தி, தலைவர் பதவியை பொறுப்பானவரிடம் ஒப்படைக்க வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். – அதுதான் முக்கியம்!

## சூறாவளிப் பரப்புரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதான அரசியல் கட்சிகளான தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மௌபிம ஜனதாக் கட்சி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் கட்சி நாடு முழுவதும் பிரசாரக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளன.

இதேபோன்று வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும், மலையகம் மற்றும் தலைநகர் கொழும்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி இயங்கும் தமிழ்க் கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

## கிழக்கு பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பதிவளரால் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்கள் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து புள்ளிகளை வழங்கினர்.

பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் முதல் நிலையிலும், சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன், விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் படி, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். பல்கலைக் கழகச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து, நியமனம் செய்வார்.

# வெள்ள அனர்த்தங்களால் 159,511 பேர் பாதிப்பு

## இடர்முகாமைத்துவ நிலையம் அறிவிப்பு



நாட்டின் பல பகுதிகளில் பெய்துவரும் பலத்த மழையினால் ஏற்பட்ட அனர்த்தங்களால் 13 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என தாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

40,758 குடும்பங்களை சேர்ந்த 159,511 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

2,433 குடும்பங்களைச் சேர்ந்த 10,361 பேர் 80 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு வீடு முழுமையாகவும் 370 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக தரவுகள் பதிவாகியுள்ளன.

ஏற்பட்ட அனர்த்தங்களின் காரணமாக இதுவரை மூவர் உயிரிழந்துள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தங்களால் கம்பஹா மாவட்டத்தில் 20,553 குடும்பங்களைச் சேர்ந்த 82,839 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# அரச இரசாயன பகுப்பாய்வாளராக சந்தியா குமுதுனி ராஜபக்ஷ நியமனம்




அரச இரசாயன பகுப்பாய்வாளராக சந்தியா குமுதுனி ராஜபக் ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையில் பிரதமரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைய இந்த நியமனம் வழங்கப்பட்டுளது.

இந்த பதவியில் பணியாற்றிவந்த தீபிகா செனவிரத்ன ஓய்வு பெற்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்காக சந்தியா குமுதுனி ராஜபக் ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.




# திங்கட்கிழமை முதல் புதிய கடவுச்சீட்டு

முன்பதிவு செய்யப்பட்டுள்ள புதிய கடவுச்சீட்டுகள் எதிர்வரும் சனிக்கிழமை நாட்டிற்கு கிடைக்கப்பெறவுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனை கூறினார்.

அதற்கமைய, புதிய கடவுச்சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் திங்கள் கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.



# மரக்கறி வகைகளின் விலையில் வீழ்ச்சி

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக, பிரதான பொருளாதார மத்திய நிலையமான கெப்பட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாகப் பல வகையான மரக்கறிகளின் விலை குறைந்துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல பிரதேசங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வெளியூர்களிலிருந்து வியாபாரிகளின் வருகை குறைவடைந்துள்ளதையும், மரக்கறி தோட்டங்களுள்ள பகுதிகளில் நிலவும் மோசமான காலநிலையும் இதற்கு முக்கிய காரணம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மழையால் பயிர்கள் நாசமாகி, அறுவடை செய்வதில் உள்ள சிரமமும் விலை வீழ்ச்சிக்குக் காரணம் என விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது கெப்பட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் மொத்த விலையில், ஒரு கிலோ பீன்ஸ் 350 - 330 ரூபா வரையிலும், ஒரு கிலோ தக்காளி 180 - 200 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 50 முதல் 60 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ கேரட் 70 முதல் 75 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ முட்டைகோஸ் 50 முதல் 70 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ சோளம் 70 முதல் 80 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

மேலும், வெண்டைக்காய் 120 - 130 ரூபாய் வரையிலும், ஒரு கிலோ கிழங்கு 60 - 70 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

உள்ளூர் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 180 - 200 ரூபா வரையிலும், ஒரு கிலோ முள்ளங்கி 60 - 70 ரூபா வரையிலும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 400 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

# சில மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை



கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, களனி கங்கை, களுகங்கை, மற்றும் அத்தனுகலு ஓயா ஆகியவற்றின் நீரமட்டம் குறைவடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை என்பவற்றின் நீரமட்டம் சற்று அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பல பகுதிகளில் வெள்ளப் பெருக்கு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எனவே, ஆறுகளை அண்டியுள்ள தாழ் நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரில்வினின் பித்தலாட்டம்

நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பார்கள். தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதத் தலைவர்களின் சிந்தனைப் போக்கையும் - கருத்து நிலைப்பாட்டையும் - அதேபோல மாற்ற முடியாது.

எந்தத் தளத்திலிருந்து வந்தாலும் - எந்தக் கொள்கைக் கோட்பாட்டை கொண்டிருந்தாலும் - அவர்கள் இடதுசாரிகளாயினும், வலதுசாரிகளாயினும், அவர்கள் மத்தியில் பௌத்த - சிங்கள மேலாதிக்க வெறித்தனப்போக்கு ஊடுருவி இருப்பதை மாற்ற முடியாது. அதன் சாயல் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

இப்போது தென்னிலங்கையில் ஆட்சி மாற்றமாக, புதிய தலைமையாக, தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்திருந்தாலும், அது, முன்னைய சிங்கள - பௌத்த பேரினவாதத் தலைமைகளிலிருந்து சற்று மாறானதாக தன்னை வெளிப்படுத்திக் காட்டி கொண்டாலும், அதுவும் அந்தப் பேரினவாத சக்தி மத்தியிலிருந்துதான் - சகதி மத்தியிலிருந்துதான் - வந்தது என்ற அடிப்படைப் போக்கிலிருந்து மாறப்போவதில்லை. அதனைத்தான் தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கமான ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவின் கருத்து நமக்குத் தெளிவாக எடுத்துரைத்துக் காட்டி நிற்கின்றது.

எப்படிப் பார்த்தாலும் இவர்கள் வழமையாக இலங்கையை ஆண்டு வந்த சிங்கள - பௌத்த பேரினவாத தரப்புகளில் இருந்தும் வேறுபட்டவர்கள் அல்லர், ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தாம் என்பதை ஓரிரு தினங்களுக்கு முன்னரும் இந்தப் பத்தியில் சுட்டி காட்டியிருந்தோம்.

அதனையே ரில்வின் சில்வாவின் இப்போதைய பேட்டி - கருத்து நிலைப்பாடு - அம்பலப்படுத்தி, உறுதிப்படுத்தி, நிற்கின்றது.

"13ஆவது திருத்தச்சட்டமும், அதிகாரப் பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல. அவர்களுக்கு அவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கே தீர்வே அவசியமாக உள்ளது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைதக்கவைத்துக்கொள்ளஇந்தவிடயங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்."

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் தங்களின் அபிலாசைகளை - வேணவாவை - எதிர்பார்ப்புகளை - காலத்துக்குக் காலம் ஒவ்வொரு தேர்தலிலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

தென்னிலங்கை தலைமைகளுக்கும் சர்வதேசத்துக்கும் அது நன்கு தெரியும்.

அப்படி இருந்தும் தமிழ் மக்களின் முடிவை - தீர்மானத்தை - கவனத்தில் எடுக்காமல், உதாசீனப்படுத்தி, அதனைத் தமிழ் அரசியல் தலைவர்களின் விருப்பமாக மாத்திரம் காட்டும் தந்திரோபாயம் தென்னிலங்கையில் புதியதல்ல.

முன்னாள் அரசியல் தலைவர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிலிருந்து, நேற்றைய மஹிந்த ராஜபக்ஷ வரை இவ்வாறு தமிழ் மக்களையும் தமிழ் தலைவர்களையும் வேறுபடுத்திக் காட்டும் அரசியல் சித்து விளையாட்டு நிகழ்ச்சி நிரல் இன்னும் தொடர்கின்றது என்பதையே ரில்வின் சில்வாவின் இப்போதைய உருட்டுப் புரட்டுக் கருத்து வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழ் தலைவர்கள் எவரும் வானத்திலிருந்து குதித்தவர்கள் அல்லர். தமிழ் மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அவர்கள். அத்தகையோர் மக்களின் கருத்து நிலைப்பாட்டையே பிரதிபலித்து நிற்பவர்கள். அவர்கள் வெளிப்படுத்துவது தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் கருத்தைத்தான். அப்படி இல்லை, மக்களின் கருத்து வேறு என்று அதிகப் பிரசங்கித்தனமாக ரில்வின் சில்வா நாடகமாடுவது - அதிகப் பிரசங்கித்தனமாக வேறு வித வியாக்கியானம் கூற முற்படுவது - தேசிய மக்கள் சக்தியின் தலைமையும் கூட முன்னைய அரசுகளின் தலைமை போல பித்தலாட்டமிக்கதுதான் என்பதை நிரூபித்து நிற்கின்றது.



# வயநாடு இடைத்தேர்தலில் களம் காண்கிறார் பிரியங்கா

## காங்கிரஸ் தலைமை அறிவிப்பு

கேரளாவின் வயநாடு தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது மக்களவை தொகுதி உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததால் அங்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பிரியங்கா காந்தி போட்டியிடுவார் என காங்கிரஸ் தலைமை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வயநாடு மற்றும் ரேபரேலி தொகுதிகளில் போட்டியிட்டு, 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றார். ஒருவர் 2 தொகுதிகளில் எம்.பி பதவி வகிக்க முடியாது என்பதால், வயநாடு எம்.பி பதவியை இராஜினாமா செய்தார். ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி எம்.பி-யாக நீடிக்கிறார்.

இந்நிலையில்,நேற்று இந்திய தேர்தல் ஆணையம் மகாராஷ்டிரா, ஜார்கண்ட் மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தல் தேதியுடன் நாட்டில் காலியாக உள்ள மற்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் திகதியையும் அறிவித்தது.

அதன்படி, “வயநாடு மக்களவைத் தொகுதிக்கான தேர்தல் நவம்பர் 13 ஆம் திகதி நடைபெறும் இந்தத் தொகுதிக்கான வேட்புமனு தாக்கல் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடங்குகிறது. வரும் 25 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்கள் வரும் 28 ஆம் திகதி பரிசீலிக்கப்படும். நவம்பர் 13 ஆம் திகதி தேர்தலில் பதிவாகும் வாக்குகள் நவம்பர் 23 ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவு அறிவிக்கப்பட உள்ளது” என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் வயநாடு மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி போட்டியிடுவார் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிவித்துள்ளார். இதன் மூலம் முதன்முறையாக வாக்கு அரசியலுக்குள் நுழைகிறார் பிரியங்கா காந்தி. மேலும், காலியாக உள்ள பாலக்காடு சட்டப்பேரவை தொகுதியில் ராகுல் மம்கூடத்தில் மற்றும் தனிதொகுதியான செலக்கரா தொகுதியில் ரம்யா ஹரிதாஸும் போட்டியிடுவார்கள் என காங்கிரஸ் அறிவித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு அமேதியில் பா.ஜ.க. வேட்பாளர் அருண் நேருவுக்கு எதிராக தனது தாயார் சோனியா காந்திக்காக பிரச்சாரம் செய்ய அரசியல் களத்துக்குள் நுழைந்தார் பிரியங்கா காந்தி. தொடர்ந்து அவர் தேர்தல் அரசியலுக்கு வருவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது வயநாடு தொகுதியில் போட்டியிட உள்ளது குறிப்பிடத்தக்கது.

# தாவூத் இப்ராகிமை போல் செயல்படும் லாரன்ஸ் பிஷ்னோய்க்கு சர்வதேச தொடர்பு



தேசியவாத காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர் பாபா சித்திக்கீ, கடந்த சனிக்கிழமை இரவு மும்பைபாந்திராவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கில் துப்பாக்கிச் சூடு நடத்திய 2 பேர் உட்பட 3 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர். ஷிவ்குமார் கவுதம் என்பவரை பொலிஸார் தேடி வருகின்றனர். இந்த கொலைக்கு பொறுப்பேற்பதாக பிரபல மும்பை தாதா லாரன்ஸ் பிஷ்னோய் முகநூலில் பதிவிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் மும்பை நிழல் உலக தாதாவாக தாவூத் இப்ராகிம் செயல்பட்டு வந்தார். அவர் பாணியை லாரன்ஸ் பிஷ்னோயும் தொடர்வது குறித்து பல தகவல்கள் வெளியாகி உள்ளன. லாரன்ஸ் கும்பலில் தற்போது சர்வதேச அளவில் கூலிப்படையாக செயல்படும் சுமார் 700 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அவர்கள் துப்பாக்கிச் சுடுதலில் பயிற்சியும் பெற்றுள்ளனர்.

இவர்கள், பாகிஸ்தான் உள்ளிட்ட 11 நாடுகளில் செயல்படுவதும் காலிஸ்தான் இயக்க தீவிரவாதி ஹர்வீந்தர் சிங் ரிண்டா, பாகிஸ்தானில் தனது சமூக விரோத நடவடிக்கைகளுக்கு லாரன்ஸின் ஆட்களை பயன்படுத்தி வருவதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.












# லெபனானிலிருந்து இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

லெபனானில் உள்ள மொத்த சனத் தொகையில் 25 சதவீதமானோர் தற்போது இஸ்ரேலிய இராணுவத்தினரால் வெளியேற்றப்படுவதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவரகம் தெரிவித்துள்ளது.

தெற்கு லெபனானில் உள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் அறிவுறுத்தியுள்ளது.

இதுகுறித்து கருத்துரைத்துள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவரகத்தின் மத்திய கிழக்கு பிராந்திய பணிப்பாளர் ரேமா ஜேமஸ், அங்குள்ள மக்கள் மறுப்பு தெரிவிக்காமல் தங்களது இருப்பிடங்களை விட்டுச் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் 1.2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என தரவுகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக வடக்கே உள்ள நகரங்களுக்கு மக்கள் இடம் பெயர்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

அவர்களில் பலர் பாதுகாப்பற்ற இடங்களில் தங்கியுள்ளனர் என ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவரகம் தெரிவித்துள்ளது.





# 6 இந்திய இராஜதந்திரிகள் கனடாவால் வெளியேற்றம்



கனடாவுக்கான உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட 6 இந்திய இராஜதந்திரிகளை கனேடிய அரசு வெளியேற்றியுள்ளது.

சீக்கிய பிரிவினைவாத தலைவரான ஹர்தீப் சிங் கொலை சம்பவத்துடன் இந்திய இராஜதந்திரிகளுக்கு தொடர்புள்ளதாக கனடா குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன், அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், கனடாவின் உயர்ஸ்தானிகர் உட்பட ஆறு உயர்மட்ட இராஜதந்திரிகளை வெளியேறுமாறு இந்தியா உத்தரவிட்டிருந்தது.

அத்துடன், கனடாவிலிருந்து தமது தூதுவரை இந்தியா மீளப் பெறுவதாகவும் இந்திய அரசாங்கம் கூறியிருந்தது.

இந்தநிலையிலேயே, உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட 6 இந்திய இராஜதந்திரிகளை கனேடிய அரசு வெளியேற்றியுள்ளது.

இராஜதந்திரிகள் வெளியேற்றமானது இரண்டு பொது நலவாய நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் விவகாரம் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது

சர்ச்சையை ஏற்படுத்திய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சில வினாக்கள் கசிந்ததையடுத்து இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டது.

எவ்வாறாயினும் 3 வினாக்களே வெளியாகியிருந்ததாகவும் அவற்றுக்கான புள்ளிகள் வழங்கப்படும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

அத்துடன், பரீட்சை மீள நடத்தப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை




தேர்தல் பிரசார செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்காத ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களில், மூன்று பேர் மட்டுமே தங்கள் செலவு அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, ஜனசேத பெரமுனவின் தலைவர் பத்தரமுல்லே சீலரதன தேரர், தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் மற்றும் சுயேட்சை வேட்பாளர் சரத் கீர்த்திரத்ன ஆகியோர் தங்களது தேர்தல் செலவு அறிக்கையைத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், பத்தரமுல்லே சீலரதன தேரர் மற்றும் சுயேச்சை வேட்பாளர் சரத் கீர்த்திரத்ன ஆகியோர் தமது செலவு அறிக்கைகளை தபால் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பொதுத் தேர்தல் செலவுகள் தொடர்பாக அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கும் இடையே நேற்று விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

வாக்காளர்களுக்கு வேட்பாளர்கள் செலவிடக்கூடிய தொகை தொடர்பான வரம்பு குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -16.10.2024




இன்று வெற்றி கிடைக்கும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் நாள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று செழிப்பாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள். முக்கிய நடவடிக்கைகள் இன்று நற்பலங்களைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை அனுசரணையோடு செய்வீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். அதிகமாக சேமிக்கும் நிலை இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் இருக்கும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும். கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் சிறந்த பலன்கள் காண்பீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களுக்கு வரவேண்டிய நீண்ட கால நிலுவைத் தொகை வந்து சேரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் விரும்பியதை அடியஅடைய கடினமாக உழைக்க வேண்டும்.

சக பணியாளர்களுடன் மோதல் காணப்படும். பணிகளைக் கையாளும்போது பொறுமை அவசியம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வீட்டில் பெரியவர்களின் உடல் நலத்திற்கு பணம் செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் உற்சாகம் அதிகமாகும்.

பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும். பணியில் ஏற்படும் மாறுபாடுகளுடன் ஒத்துப் போக உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை இருக்காது. வரவும் செலவும் சமமாக இருக்கும். இன்று எந்த முக்கிய முடிவும் எடுக்க வேண்டாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -16.10.2024




உங்களின் தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பய னுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர் வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர் கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.ஆன் மீக விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர் கள்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களி டம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள். தேவையற்ற எண்ணங்களை தவிர்த்திடுங்கள்.

நீங்கள் கவனமுடனும் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். உற்சாகமின்மை மற்றும் சோம்பல் காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந் துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக பண இழப்பு ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.இந்தச் சூழ்நிலையை நீங்கள் கையாள வேண்டும்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக் கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்பட லாம்.




உங்களின் தேவைக்கு பயன்படும் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும். இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் எளிதாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். மியூச்சுவல் பண்டில் நீங்கள் பணம் முதலீடு செய்யலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு கவலையையும் குழப் பத்தையும் ஏற்படுத்தும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக் காது. பணியில் தவறுகள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக் கும். எனவே எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணை யுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. சில சூழ்நிலைகளில் நீங்கள் பணத்தை சரியாக கையாள இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற் றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேர லாம்.

